நகராட்சி அலுவலகம்,
சாத்தூர்.
நாள்: 17.11.2021

<u>சாத்தூர் நகர்மன்ற அவசரக் கூட்டம்</u>

நிகழும் மங்களகரமான ஆண்டு பிலவ வருடம் கார்த்திகை 01 ஆம் நாள் 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய பொருட்கள் விவரம் பின்வருமாறு.

முன்னிலை : திரு.எம்.இளவரசன், பி.காம்.,
தனி அலுவலர்,
சாத்தூர் நகராட்சி.

<u>பொருள் எண்: 1</u>

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் 02.10.2021ம் தேதிய ந.க.எண்.21287/2021/EA2ல் வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்கு அளவுகோலின்படி கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறது என்ற விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| S. No | Details of the activities | Base data | Sanitary worker | | Driver | | Electrician | | Sanitary supervisor |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Norms | Requirement | Norms | Requirement | Norms | Requirement | Requirement |
| 1 | Door to Door collection BOV | 12678 | 2 per 400 HH | 38 | | | | | |
| 2 | Door to Door Collectin LCV | 12678 | 2 per 1200 | 8 | 1 | 4 | | | |
| 3 | Door to Door Collection Comericial with LCV | 1197 | 1 per 500 C | 2 | 500 | 2 | | | |
| 4 | Door to door Colletion commercial with HCV | 0 | 2 per 1000 C | 0 | 1000 | 0 | | | |
| 5 | Road/ Street sweeping | 24 | 1 | 24 | 0 | | | | |
| 6 | wet wast processing MCC | 3 | 5 | 15 | | | | | |
| 7 | wet wast processing OCC | 0 | 1 | 0 | | | | | |
| 8 | wet waste processing Bio Gas Plant | 0 | 2 | 0 | | | 1 | 0 | |
| 9 | Wet waste Processing CPC/windrow/ vermi | 0 | 3 | 0 | | | | | |
| 10 | Dry waste Handling RRC | 1 | 4 | 4 | | | | | |
| 11 | Market More than one acre | 0 | 4 | 0 | 1 | 0 | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | Market less than one acre | 1 | 2 | 2 | 1 | 1 | | | |
| 13 | weekly market | 0 | 2 | 0 | 1 | 0 | | | |
| 14 | Bus stand A,B | 0 | 8 | 0 | 1 | 0 | | | |
| 15 | Bus stand C, D | 1 | 4 | 4 | 1 | 1 | | | |
| 16 | Public Toilet | 4 | 2 for 4 toilets | 2 | | | | | |
| 17 | Park with one acre | 3 | 1 | 3 | | | | | |
| 18 | Park with more than one acre | 0 | 2 | 0 | | | | | |
| 19 | Road side greenery and median | 1 | 1 | 1 | 1 | 1 | | | |
| 20 | water bodies vehcile operation | 0 | 1/20 wards | 1 | 1/20 wards | 1 | | | |
| 21 | Road margin vehicle operation | full ulb | 0 | 0 | 1 | 1 | | | |
| 22 | Jungle cleaning vehicle operatin | full ulb | 1 | 1 | 1 | 1 | | | |
| 23 | Supervisors | 24 | 2 | | | | | | 12 |
| | **Total manpower** | | | **106** | | **12** | | **0** | **12** |
| | **Available** | | | **29** | | **3** | | **0** | **4** |
| | **Gap** | | | **77** | | **9** | | **0** | **8** |
| | **Proposed** | | | **77** | | **9** | | **0** | **8** |
| | **Rate** | | | **461.00** | | **708.00** | | **708.00** | **562.00** |
| | **Amount in Lakhs** | | | **127.79** | | **22.94** | | **0.00** | **16.19** |
| | **Total Base Cost cost in Lakhs** | | | | **166.91** | | | | |
| | **Total estimated cost including GST, EPF, ESI, EPF admin, EDLI and agency charges** | | | | **197.81** | | | | |

சாத்தூர் நகராட்சியில் கடந்த மூன்று வருடங்களில் தூய்மை பணியாளர்கள் 77 நபர்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகள் தனியார்மயமாக செய்தமைக்கு செலவினம் ஆண்டுக்கு ரூ. 72 லட்சம் வீதம் மூன்று ஆண்டுகளுக்கு ரூ. 216 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மேலும், சாத்தூர் நகராட்சிக்கு தேவைப்படும் தூய்மை பணியாளர்கள் 77 நபர்கள், மேற்பார்வையாளர்கள் 8 நபர்கள் மற்றும் ஓட்டுநர்கள் 9 நபர்கள் ஆகியோர்களை வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் முதன்மை அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவதற்கும் பிரேரனையை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைத்து அதற்காகும் 1 ஆண்டுகளுக்கு ஏற்படும் உத்தேச செலவுத் தொகை ரூ.197.81 இலட்சம் செலவினத்திற்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 790/2021/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 828, நாள்: 17.11.2021.**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 2

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம். ந.க.எண்.21787/2021/EA2 நாள் 02.10.2021–ல் வெளிக்கொணர்வு முகமை மூலம் தெரு விளக்கு பராமரிப்பு பணிகளுக்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த அளவு கோலின்படி இந்நகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

| Sl.No | Designation of the staff/ employee | Total staff requirement |
|---|---|---|
| 1 | Wireman | 2 |
| 2 | Electrical helper | 1 |
| 3 | Driver | 0 |
| Total | | 3 |

இதன்படி மேற்காணும் பணியாளர்களை ஓராண்டுகளுக்கு தொடர்ந்து பணியமர்த்தும் போது ஏற்படும் உத்தேச செலவினம் பின்வருமாறு.

| Sl. No | Name of the Post | Basic Salary per day per person as per SoR or as approved in Rs | Total salary per day per person (basic pay *1.1851) Rs. | Total salary per month per person Rs. | Total salary per annum per person Rs .in lakhs | No. of person to be engag ed | Total Budget to be provided per year Rs in Lakhs | Total Value to be put in to tender (= Budget / 1.1851) Rs. In lakhs |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | wireman | 708 | 839.05 | 25171.52 | 3.02 | 2 | 6.04 | 5.10 |
| 2 | wireman helper | 556 | 658.92 | 19767.46 | 2.37 | 1 | 2.37 | 2.00 |
| Total cost | | | | | | 3 | 8.41 | 7.10 |

எனவே சாத்தூர் நகராட்சிக்கு தேவைப்படும் மேற்கண்ட தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான நபர்களை வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் முதன்மை அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவும், இதன் பொருட்டு ஓராண்டிற்கு ஏற்படும் உத்தேச தொகை ரூ.8.41 இலட்சம் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

1. தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியத்தை கருதி, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று பணியமர்த்திக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதி அல்லது அரசு மான்யத்தில் ஈடு செய்யலாம்.
   (ந.க.எண். 791/2021/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 829, நாள்: 17.11.2021.**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 3

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம். ந.க.எண்.21787/2021/EA2 நாள் 02.10.2021–ல் வெளிக்கொணர்வு முகமை மூலம் குடிநீர் பராமரிப்பு பணிகளுக்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த அளவு கோலின்படி இந்நகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

| Sl. No | Designation of the staff/ employee | Name of the Activities | | | | | | | Total staff requirement |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Head works | WTP | Filter bed | Pumping station | on line booster | OHT/ sump | Water tanker | |
| 1 | Electrical Superindent | | | | 1 | | | | 1 |
| 2 | Electrician C | 3 | | | 1 | | | | 4 |
| 3 | Electrician B | | | | 1 | | | | 1 |
| 4 | Maintenance assistant | 3 | | | 3 | | 10 | | 16 |
| 5 | Driver | | | | | | | 1 | 1 |
| 6 | Cleaner | | | | | | | 1 | 1 |
| **Total** | | | | | | | | | **24** |

இதன்படி மேற்காணும் பணியாளர்களை ஓராண்டுகளுக்கு தொடர்ந்து பணியமர்த்தும் போது ஏற்படும் உத்தேச செலவினம் பின்வருமாறு.

| Sl. No | Name of the Post | Basic Salary per day per person as per SoR or as approved in Rs | Total salary per day per person (basic pay *1.1851) Rs. | Total salary per month per person Rs. | Total salary per annum per person Rs .in lakhs | No. of person to be engaged | Total Budget to be provided per year Rs in Lakhs | Total Value to be put in to tender (= Budget / 1.1851) Rs. In lakhs |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Electrical Superindent | 945 | 1119.92 | 33597.59 | 4.03 | 1 | 4.03 | 3.40 |
| 2 | Electrician C | 712 | 843.79 | 25313.74 | 3.04 | 4 | 12.15 | 10.25 |
| 3 | Electrician B | 708 | 839.05 | 25171.52 | 3.02 | 1 | 3.02 | 2.55 |
| 4 | Maintenance assistant | 581 | 688.54 | 20656.29 | 2.48 | 16 | 39.66 | 33.47 |
| 5 | Driver | 708 | 839.05 | 25171.52 | 3.02 | 1 | 3.02 | 2.55 |
| 6 | Cleaner | 443 | 525.00 | 15749.98 | 1.89 | 1 | 1.89 | 1.59 |
| Total cost | | | | | | **24** | **63.77** | **53.81** |

எனவே சாத்தூர் நகராட்சிக்கு தேவைப்படும் மேற்கண்ட குடிநீர் பராமரிப்பு பணிகளுக்கு தேவையான நபர்களை வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் முதன்மை அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவும், இதன் பொருட்டு ஓராண்டிற்கு ஏற்படும் உத்தேச தொகை ரூ.**63.77** இலட்சம் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

1. குடிநீர் பராமரிப்பு பணியின் அவசர அவசியத்தை கருதி, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று பணியமர்த்திக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதி அல்லது அரசு மான்யத்தில் ஈடு செய்யலாம்.
   (ந.க.எண். 791/2021/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 830, நாள்: 17.11.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 4</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம். ந.க.எண். 21787/2021/EA2, நாள் 02.10.2021–ல் வெளிக்கொணர்வு முகமை மூலம் பாதாளச் சாக்கடை பராமரிப்பு பணிகளுக்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த அளவு கோலின்படி இந்நகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

| Sl. | Designation of the staff/ employee | Name of the Activities | | | | | | Total staff requirement |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | STP | M pumping station | sub pumping station | Lift station | sewer/ collection system | vehicle | |
| 1 | Electrician C | 1 | | | | | | 1 |
| 2 | Electrician B | | 2 | | | | | 2 |
| 3 | Maintenance Assistant | | 6 | | | | | 6 |
| 4 | Driver | | | | | | 4 | 4 |
| 5 | Cleaner | | | | | | 4 | 4 |
| 6 | sewer inspector | | | | | 1 | | 1 |
| 7 | sewer cleaner | | | | | 3 | | 3 |
| 8 | street sewer | | | | | 1 | | 1 |
| Total | | | | | | | | **22** |

இதன்படி மேற்காணும் பணியாளர்களை ஓராண்டுகளுக்கு தொடர்ந்து பணியமர்த்தும் போது ஏற்படும் உத்தேச செலவினம் பின்வருமாறு.

| Sl. No | Name of the Post | Basic Salary per day per person as per SoR or as approved in Rs | Total salary per day per person (basic pay *1.1851) Rs. | Total salary per month per person Rs. | Total salary per annum per person Rs .in lakhs | No. of person to be engag ed | Total Budget to be provided per year Rs in Lakhs | Total Value to be put in to tender (= Budget / 1.1851) Rs. In lakhs |
|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | Electrician C | 712 | 843.79 | 25314 | 3.04 | 1 | 3.04 | 2.56 |
| 2 | Electrician B | 708 | 839.05 | 25172 | 3.02 | 2 | 6.04 | 5.10 |
| **3** | Maintenance Assistant | 584 | 692.10 | 20763 | 2.49 | 6 | 14.95 | 12.61 |
| 4 | Sewer Inspector | 639 | 757.28 | 22718 | 2.73 | 1 | 2.73 | 2.30 |
| 5 | Sewer cleaner | 558 | 661.29 | 19839 | 2.38 | 3 | 7.14 | 6.03 |
| 6 | Sewer Sewer | 533 | 631.66 | 18950 | 2.27 | 1 | 2.27 | 1.92 |
| 6 | Driver | 708 | 839.05 | 25172 | 3.02 | 4 | 12.08 | 10.20 |
| 7 | Cleaner | 443 | 525.00 | 15750 | 1.89 | 4 | 7.56 | 6.38 |
| **Total cost** | | | | | | **22** | **55.81** | **47.10** |

எனவே சாத்தூர் நகராட்சிக்கு தேவைப்படும் மேற்கண்ட பாதாளச் சாக்கடை பராமரிப்பு பணிகளுக்கு தேவையான நபர்களை வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் முதன்மை அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவும், இதன் பொருட்டு ஓராண்டிற்கு ஏற்படும் உத்தேச தொகை ரூ.**55.81** இலட்சம் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

1. பாதாளச் சாக்கடை பராமரிப்பு பணியின் அவசர அவசியத்தை கருதி, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று பணியமர்த்திக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதி அல்லது அரசு மான்யத்தில் ஈடு செய்யலாம்.
   **(ந.க.எண். 791/2021/எம்1)**

**நகர்மன்றத் தீர்மானம் எண். 831, நாள்: 17.11.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 5

சாத்தூர் நகராட்சி பகுதியில் புதிய பாதாளச் சாக்கடை திட்டத்தினால் சேதமடைந்த சாலைகளை சீரமைப்பதற்கு 2020–2021–ம் ஆண்டிற்கு சிறப்பு சாலை திட்டத்தின் கீழ் ரூ.800.00 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைக்கும் எடுத்து கொள்ள டுபிட்கோ நிறுவனத்தின் மூலம் கடன் தொகையாக ரூ.680.00 இலட்சமும், நகராட்சி பங்கு தொகையாக ரூ.120.00 இலட்சம் பங்கு தொகையாக செலுத்தி பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. பணியினை மேற்கொள்ளும் பொருட்டு 4 சிப்பங்களாக பிரிவினை செய்து திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கு நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் சென்னை அவர்களால் உரிய தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு பணியில் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. தற்போது இந்நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் பொது நிதியில் இல்லாததாலும் ஏற்கனவே பல்வேறு திட்டங்களில் புதிய பாதாளச் சாக்கடை திட்டம், புதிய கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் இதர திட்ட பணிகளுக்கு அரசிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகை செலுத்த இயலாத நிலையில் மேலும் இத்திட்டத்திற்கு பெறப்படும் கடன் தொகை மற்றும் பொது நிதியிலிருந்து செலவு செய்ய இயலாத நிலையில் உள்ளதால் மேற்கண்ட திட்டத்தில் எடுத்து கொள்ளப்பட்ட பணிகளில் மேற்கொள்ளாத பணிகளை ரத்து செய்வதற்கு மன்றத்தின் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>ரத்து செய்யப்படும் பணிகள் விபரம்</u>

| வ. எண் | பணி விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சம்) | செலவு தொகை (ரூ. இலட்சம்) | கைவிடப்படும் பணிக்கான மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சம்) |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 மற்றும் 2–ல் நம்மாழ்வார் காம்பவுண்டு, வெம்பக்கோட்டை ரோடு மற்றும் அதன் உள்ளடக்கிய பகுதிகளில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலை பணிகள் **– சிப்பம் 1** | ரூ.200.00 | ரூ.118.88 | ரூ.81.12 |
| 2 | வார்டு எண்.6 மற்றும் 7–ல் ஆண்டாள்புரம், நடராஜா தியேட்டர் ரோடு மற்றும் பைபாஸ் ரோடு அதன் உள்ளடக்கிய பகுதிகளில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலை பணிகள் **– சிப்பம் 2** | ரூ.200.00 | ரூ.141.32 | ரூ.58.68 |
| 3 | வார்டு எண்.8–ல் மேலக்காந்தி நகர் மெயின் மற்றும் குறுக்கு தெருக்கள் மகாலட்சுமி கல்யாண மண்டபம் மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெருக்கள் அதன் உள்ளடக்கிய பகுதிகளில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலை பணிகள் **– சிப்பம் 3** | ரூ.200.00 | ரூ.144.47 | ரூ.55.53 |
| 4 | வார்டு எண்.8 மற்றும் 21–ல் மேலக்காந்தி நகர் குறுக்கு தெருக்கள், காட்டு நாயக்கர் தெரு, மற்றும் கீழ்க்காந்தி நகர் மெயின் மற்றும் குறுக்கு தெருக்கள் அதன் உள்ளடக்கிய பகுதிகளில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலை பணிகள் **– சிப்பம் 4** | ரூ.200.00 | ரூ.130.42 | ரூ.69.58 |
| | **மொத்தம்** | **ரூ.800.00** | **ரூ.535.09** | **ரூ.264.91** |

2020–2021–ம் ஆண்டிற்கு சிறப்பு சாலை திட்டத்தின் கீழ் டுபிட்கோ நிறுவனத்தின் மூலம் கடன் தொகையாக ரூ.680.00 இலட்சமும், நகராட்சி பங்கு தொகையாக ரூ.120.00 இலட்சம் பங்கு தொகையாக செலுத்தி பணியினை மேற்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்ட கடன் தவணை தொகையாக ரூ.340.00 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. தற்போது வரை இத்திட்டத்தில் ரூ.535.07 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் பொது நிதியில் இல்லாததாலும் ஏற்கனவே பல்வேறு திட்ட பணிகளான புதிய பாதாளச் சாக்கடை திட்டம், புதிய கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் இதர திட்ட பணிகளுக்கு அரசிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகை செலுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பட்டியலில் குறிப்பிட்டுள்ள பணிகளை ரத்து செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.453/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 832, நாள்: 17.11.2021.**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: **6**</u>

சாத்தூர் நகராட்சி பகுதியில் புதிய பாதாளச் சாக்கடை திட்டத்தினால் சேதமடைந்த சாலைகளை சீரமைப்பதற்கு 2020–2021–ம் ஆண்டிற்கு தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி எடுத்து கொள்ள அரசு மானியமாக ரூ.150.00 இலட்சமும், நகராட்சி பங்கு தொகையாக ரூ.50.00 இலட்சம் பங்கு தொகையாக செலுத்தி பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. பணியினை மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் சென்னை அவர்களால் உரிய தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. தற்போது இந்நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் பொது நிதியில் இல்லாததாலும் ஏற்கனவே பல்வேறு திட்டங்களில் புதிய பாதாளச் சாக்கடை திட்டம், புதிய கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் இதர திட்ட பணிகளுக்கு அரசிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகை செலுத்த இயலாத நிலையில் மேலும் இத்திட்டத்திற்கு பெறப்படும் கடன் தொகை மற்றும் பொது நிதியிலிருந்து செலவு செய்ய இயலாத நிலையில் உள்ளதால் மேற்கண்ட திட்டத்தில் எடுத்து கொள்ளப்பட்ட பணிகளில் மேற்கொள்ளாத பணிகளை ரத்து செய்வதற்கு மன்றத்தின் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>ரத்து செய்யப்படும் பணிகள் விபரம்</u>

| வ. எண் | பணி விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சம்) | கைவிடப்படும் பணிக்கான மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சம்) |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.3 அன்பு இல்லம் காம்பளக்ஸ், ஒரிஜினல் கிணற்று ரேசன் கடை தெரு, கார்த்திகேயன் பைனான்ஸ் தெரு, ஒரிஜினல் கிணற்று தெரு, நியூ காலனி மற்றும் LIC ஆபிஸ் குறுக்கு தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | ரூ.200.00 | ரூ.50.00 |

2020–2021–ம் ஆண்டிற்கு தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் தவணை மற்றும் இரண்டாம் தவணை தொகையாக இதுவரை ரூ.150.00 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. தற்போது வரை இத்திட்டத்தில் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அரசு ஒதுக்கீடு செய்யப்பட்ட மானிய தொகைக்கு பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளது. நகராட்சி பங்கு தொகையான ரூ.50.00 இலட்சத்தினை செலுத்தி பணியினை மேற்கொள்ளுவதற்கு இந்நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் பொது நிதியில் இல்லாததாலும் ஏற்கனவே பல்வேறு திட்ட பணிகளான புதிய பாதாளச் சாக்கடை திட்டம், புதிய கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் இதர திட்ட பணிகளுக்கு அரசிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகை செலுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பட்டியலில் குறிப்பிட்டுள்ள பணிகளை ரத்து செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.252/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 833, நாள்: 17.11.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) எம்.இளவரசன், பி.காம்.,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**